
TARGETIN



# TNPSC GROUP-II 2023



## MAINS WRITTEN EXAM

## QUESTION WITH SIMPLIFIED ANSWER

**3**

**தேர்வு**

- நாட்டின் வளர்ச்சியில் வன்முறையின் பாதிப்புகள்
- மத வன்முறை, சாதி வன்முறை மற்றும் பயங்கரவாதம்,
- மனித உரிமை பிரச்சனைகள்
- தகவல் அறியும் உரிமை
- மத்திய, மாநில ஆணையங்கள்

**தமிழ் வழி**


ARISE AWAKE ACHIEVE

SURESH' IAS ACADEMY

| THOOTHUKUDI | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI |
|---|---|---|---|---|
| 0461 - 4000970 | 0462 - 2560123 | 75503 52916 | 0452 - 2383777 | 97555 52003 |
| 99445 11344 | 98942 41422 | 75503 52917 | 98431 10566 | 97555 52009 |

TEST 3 வெற்றி ஒன்றே இலக்கு

# Answer Key - Tamil

அலகு - 1

**1) தேசிய விசாரணை அமைப்பு பற்றிச் சிறுகுறிப்பு தருக.**

**தேசிய விசாரணை அமைப்பு** 1

- ராஷ்ட்ரிய அன்வேஷன் அபிகரன் பாரத சர்கார்.
- தேசிய புலனாய்வு முகமை சட்டம், 2008ன் கீழ் உருவாக்கப்பட்டது.

**நோக்கம்** 2

- இந்தியாவின் இறையாண்மை, பாதுகாப்பு மற்றும் ஒருமைப்பாடு, மாநிலங்களின் பாதுகாப்பு ஆகியவற்றைப் பாதிக்கும் குற்றச் செயல்களை விசாரிக்க

**தலைமையகம்**

- புதுடெல்லி
- பொது இயக்குநர்
- தினகர் குப்தா (2022)

**வரையறுக்கப்பட்ட குற்றங்கள்** 2

- அணுசக்தி திட்டம் - 1962
- சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் - 1967
- 2008 மும்பை பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிந்தைய பயங்காரவாத மற்றும் சட்டங்கள் தொடர்பான குற்றங்களை விசாரிக்க உருவாக்கப்பட்டது.
- வழக்குகள் NIA சிறப்பு நீதிமன்றத்தில் வைக்கப்படுகின்றன.

**சமீபத்திய சட்ட திருத்தம்** 1

- NIA திருத்தம், மசோதா, 2019
- விசாரிக்கப்படும் கூடுதல் குற்றங்கள்
- மனித கடத்தல்
- இணைய வழியில் நடைபெறும் சட்டவிரோத செயல்
- வெடிபொருளுக்கு எதிரான சட்டம், 1908ன் கீழ் பதிவாகும் குற்றங்கள்
- பிரிவு இணைய வழி தீவிரவாதம் தொடர்பானது.
- தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் பிரிவு 66 அட்டவணைப் பட்டியலிடும் குற்றங்களில் சேர்க்கிறது.
- சிறப்பு நீதிமன்றத்தின் 1973 குற்றவியல் சட்டத்தின் கீழ் அனைத்து அதிகாரங்களையும் கொண்டுள்ளது.

**2) இந்தியாவில் நக்சல் பயங்கரவாதம் பற்றி ஒரு விரிவான கட்டுரை வரைக.**

**இந்தியாவில் நக்சல் பயங்கரவாதம்**

- 1967 1.5
- நக்சல் பாரி என்ற கிராமத்திலிருந்து பெறப்பட்டது.
- விவசாயிகளுக்கு நிலத்தினை மீட்டுக்கொடுப்பதே இதன் நோக்கமாகும்.
- நிலமற்ற தொழிலாளர்கள் மற்றும் பழங்குடியினர்களின் உரிமைக்காக கொரில்லா முறையில் போராடியது.

**நக்சலைட் பரவ காரணங்கள்** 1.5

- சமனற்ற வருமான நிலை
- அரசின் பொறுப்பற்ற தன்மை
- நிலச்சீர்திருத்த முயற்சியில் இருந்த தோல்வி
- அதிக வறுமை மற்றும் வேலையின்மை
- வட்டார ஏற்றத்தாழ்வு
- காவல்திறன் குறைவு மற்றும் ஊழல்

**இயக்கத்தின் விளைவுகள்** 3

- சட்ட ஒழுங்கு அமைதியை பாதிக்கிறது.
- அரசு, ஜனநாயக அமைப்புகள், காவல்துறையின் மீது நம்பிக்கையின்மையை ஏற்படுத்துகிறது.
- உற்பத்தி திறனின்றி இயற்கை வளம் அழிக்கப்படுகிறது.
- இந்திய காடுகளில் 1/5 பகுதி பாதிக்கப்படுகிறது.
- இளைஞர்கள் திசை மாறுவதால் மனிதவள மேம்பாடு வளர்ச்சியில் தொய்வு ஏற்படுகிறது.

SURESH'

**முடிவுரை**

- வடகிழக்குப் பகுதியில், காடுகள் மற்றும் பழங்குடியினர்களில் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்குடன் செயல்படுகின்றனர்.

**3) பயங்கரவாத தடுப்புச் சட்டம் 2002 பற்றி விரிவான கட்டுரை வரைக.**

**பயங்கரவாத தடுப்புச் சட்டம் 2002** 1

- இந்தியாவின் ஒருமைப்பாடு, பாதுகாப்பு அல்லது இறையாண்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் நோக்கம் கொண்ட பயங்கரவாத நடவடிக்கை என வரையறுக்கப்படுகிறது.

**நோக்கம்** 2.5

- இந்தியாவில் வளர்ந்துவரும் பயங்கரவாதத்தை தடுக்க

**தகவல்கள்**

- மார்ச் 2002 பாராளுமன்றத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை வலுப்படுத்துகிறது.
- இச்சட்டம் இந்தியா முழுமைக்கும் பொருத்தமானது.
- 6 அத்தியாயங்களும் 6 சட்டப்பிரிவுகளும் 1 பட்டியலும் உள்ளது.
- 8 மாதங்களில் 940 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
- இந்தியாவில் எவர் ஒருவர் குற்றம் செய்தாலும் இச்சட்டத்தில் சொல்லப்பட்ட குற்றத்தை வெளிநாட்டவர் செய்தாலும் இச்சட்டம் அமலில் இருக்கும்.

**சிறப்பு அம்சங்கள்** 2.5

- இச்சட்டத்தில் உள்ள அனைத்து குற்றங்களையும் காவல்துறை கண்காணிப்பாளர் மட்டுமே விசாரிக்க முடியும்.
- காவல்துறை அதிகாரி பொய்யாக வழக்கு தொடர்ந்தால், அதிகாரிக்கு 2 வருடங்கள் வரை சிறை (அ) அபராதம் (அ) இரண்டும் விதிக்கப்படும்.

**4) சச்சார் கமிட்டி பற்றி எழுதுவதுடன் அதன் முக்கிய பரிந்துரைகளை எடுத்துரைக்க.**

**சச்சார் கமிட்டி** 2

- மார்ச் 09, 2005
- முஸ்லீம் சமூகத்தாரின் சமூக, பொருளாதார கல்வியை குறித்து கண்டறிந்து அறிக்கை அளிக்கஅமைக்கப்பட்டது.
- நீதியரசர் இராஜேந்திர சச்சார் – தலைமை
- 2006 நவம்பரில் அறிக்கையை சமர்ப்பித்தது.

**முக்கிய பரிந்துரைகள்** 4

- தரவுகளைப் பெற்று அவற்றை பேணிட தேசிய தரவு வங்கி உருவாக்கப்பட வேண்டும்.
- ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை சிறுபான்மையினர் நிலை மறு ஆய்வு
- பாகுபாடுகளைக் கண்டறிந்து, அவற்றை களைந்திட சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பொது அதிகாரத்தில் சிறுபான்மையினரின் மானியம் வழங்குதல்
- சிறுபான்மை கல்வி நிறுவனங்களின் மேம்பாடு
- பொது வெளியிடங்களில் சிறுபான்மையினருக்கு வாய்ப்புகளை உருவாக்குதல்
- முஸ்லீம் மக்களின் வாழ்விடங்களில் தரமிக்க பள்ளிகள், கல்லூரிகளை உருவாக்குதல்
- கல்வியில் பின்தங்கிய சிறுபான்மை சமூகத்தவருக்கு கல்வி உதவித் திட்ட அமைப்புகளை உருவாக்குதல்

**5) இரங்கநாத் மிஸ்ரா குழு மற்றும் முக்கியப் பரிந்துரைகளை எழுதுக.**

**இரங்கநாத் மிஸ்ரா குழு** 2

- 2004
- தேசிய மத மற்றும் மொழிவாரி சிறுபான்மையினர் ஆணையம்

**ஆணையமானது** 2

- தலைவர், நீதிபதி இரங்கநாத் மிஸ்ரா
- மூன்று உறுப்பினர்கள், அதில் ஒருவர் அரசியலமைப்பில் சிறந்து விளங்குபவர்
- ஒரு உறுப்பினர் – செயலர்

**நோக்கம்**

- மத மற்றும் மொழிச் சிறுபான்மையினரில் சமூக, பொருளாதார ரீதியாக பின்தங்கியவரை அடையாளம் கண்டு பரிந்துரைத்தல்

- அவர்களின் நலனுக்கான செயல்பாடுகளை பரிந்துரைத்தல்
- அறிக்கையை 2007இல் சமர்ப்பித்தது.

**முக்கிய பரிந்துரைகள்** 2

- சிறுபான்மையினர் அல்லாத கல்வி நிறுவனங்களில் குறைந்தது 15% இட ஒதுக்கீடு, முஸ்லீம்களுக்கு 10%, சிறுபான்மையினருக்கு 5%
- இட ஒதுக்கீடானது ஊரக வேலைவாய்ப்புத் திட்டங்கள், பிரதமரின் திட்டங்களின் ரோஜ்கர் யோஜனா, கிராமின் ரோஜ்கர் யோஜ்னா ஆகியவற்றிலும் வழங்கப்பட வேண்டும்.
- அட்டவணை வகுப்பில் SC இல் இருந்து மதம் மாறிய முஸ்லீம் கிறித்தவருக்கும் அட்டவணை வகுப்பில் இட ஒதுக்கீடு

**6) தேசிய பாதுகாப்புப் படை பற்றிச் சிறுகுறிப்பு வரைக.**

**தேசிய பாதுகாப்புப் படை- 1986** 1.5

- தேசிய பாதுகாப்புச் சட்டம் – 1986
- பயங்கரவாத எதிர்ப்பு பிரிவு
- பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை சமாளிக்க ஏற்படுத்தப்பட்ட உலகத் தரம்வாய்ந்த பிழையற்ற அமைப்பு
- ஆபரேஷன் ப்ளூ ஸ்டார், பொற்கோவில் தாக்குதல், முன்னால் பிரதமர் இந்திரா காந்தியின் படுகொலையை தொடர்ந்து நிறுவப்பட்டது.

**நோக்கம்** 1.5

- பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக போராடுகிறது.

**தலைமை**

- பொது இயக்குநர்

**பொன்மொழி** 1.5

- சர்வதியா, சர்வோதம், சுரக்ஷா
- இரண்டு சிறப்பு கூறுகளை கொண்டுள்ளது.
- சிறப்பு நடவடிக்கை குழு
- சிறப்பு வரம்பு குழு

**மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்** 1.5

- ஆபரேஷன் ப்ளாக் தண்டர் – 1986 & 1988
- ஆபரேஷன் அஸ்வமேத் – 1993
- ஆபரேஷன் தண்டர்போல்ட் அல்லது வஜ்ரசக்தி – 2002
- ஆபரேஷன் ப்ளாக் டோர்னடோ – 2008

**செயல்பாடுகள்**

- எதிர்கடத்தல் பணி
- வெடிகுண்டு அகற்றல்
- பிணைக்கைதிகள்
- VIP பாதுகாப்பு

**7) தேசிய பாதுகாப்புச் சட்டம் 1980 பற்றி எழுதுக.**

**தேசிய பாதுகாப்புச் சட்டம் 1980**

- ஒரு தடுப்புக் காவல் சட்டமாகும்.

**நோக்கம்** 3

- ஒரு நபரை எதிர்கால குற்றங்கள் செய்வதிலிருந்தும் தவிர்க்க தடுப்புக் காவலில் வைத்தல்

**தடுப்புக் காவல் தொடர்பான அரசியலமைப்பு விதிகள்**

- விதி 22 (3) மாநில பாதுகாப்பு மற்றும் பொது ஒழுங்கு காரணங்களுக்காக தடுப்பு காவலில் மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தை கட்டுப்படுத்துகிறது.
- விதி 22(4), ஒரு நபரை மூன்று மாதங்களுக்கு மேல் காவலில் வைக்க அனுமதி இல்லை.

**வழிவகைகள்** 1.5

- தேசிய பாதுகாப்புக்கு எதிராக ஒரு நபர் செயல்படுவதை தடுக்க மத்திய, மாநில அரசுக்கு அதிகாரமளித்தது.
- பொது ஒழுங்கை சீர்குலைப்பதிலிருந்து தடுக்க ஒரு நபரை அரசாங்கம் தடுத்து வைக்கலாம்.
- ஒரு நபரை அதிகபட்சமாக 12 மாதம் சிறையில் வைக்கலாம்.

**NSA சட்டத்திற்கு எதிரான விமர்சனம்** 1.5

- சரியான புள்ளி விவரங்கள் கிடைக்காத தன்மை
- சந்தேகத்திற்குரிய குற்றங்களுக்காக குடிமக்களை காவலில் வைக்க கடுமையான சட்டத்தை ஏற்படுத்தியது.
- 40 ஆண்டுகள் பழமையானது.
- தன்னிச்சையாக செயல்படாமல் இருக்க மாற்றங்கள் தேவைப்படுகிறது.

SURESH'

- தன்னிச்சையான பயன்பாடு ஒரு தனிநபரின் அடிப்படை உரிமைகளை தடுக்கிறது.

**8) உல்ஃபா பயங்கரவாதம் பற்றி சுருக்கி வரைக.**

**உல்ஃபா பயங்கரவாதம்** 2

- அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி
- இந்தியாவின் அசாம் மாநிலத்தில் இயங்கக்கூடிய ஒரு வகுப்புவாத அமைப்பு
- அசாமை சமூக சுதந்திரமுள்ள மாநிலமாக உருவாக்க முயல்கிறது.
- 1979இல் பரேஸ் பருவா என்பவரால் நிறுவப்பட்டது.
- 1990இல் இந்திய அரசு இந்த அமைப்பை பயங்கரவாத அமைப்பாக அறிவித்தது.

**உல்ஃபாவின் பரவல்** 2

- தென்கிழக்கு ஆசியாவின் செல்வாக்கு மிக்க ஆக்கிரமிப்பு குழுக்களில் ஒன்றாக உயர்ந்தது.
- பாதுகாப்பு படைகள், இரயில் பாதைகள் போன்றவைகளை குறிவைத்து உல்ஃபா 1990களில் தாக்குதலை தொடங்கியது.

**ஒருங்கமைக்கப்பட்ட குற்றம்** 2

- புரட்சியை முன்னெடுப்பது என்ற பெயரில் பணம் மற்றும் துப்பாக்கிகளை சேகரிப்பதில் கவனம் செலுத்தியது.
- இது மாநிலம் முழுவதும் ஏற்கத்தகாத வன்முறைக்கு வழிவகுத்தது.

**சட்டம் மற்றும் ஒழுங்கு**

- இந்த அமைப்பை பின்பற்றுபவர்கள், அதிக முறையில் ஏமாற்றமும் கோபமும் அடைந்தால், தங்களின் பாதுகாப்பிற்காக அப்பாவி மக்களை கொன்றனர்.

**9) (a) உள்நாட்டு நுழைவு அனுமதிச்சீட்டுபொருள்**

**(b) ரோஷினி திட்டம்**

**a) உள்நாட்டு நுழைவு அனுமதிச் சீட்டு (ILP)** 1.5

- இந்திய குடிமக்கள் இந்தியாவின் ILP ன் கீழ் உள்ள பாதுகாக்கப்பட்ட பகுதியில் நுழைவதற்கு வழங்கப்படும் அனுமதிச்சீட்டு
- நாகலாந்து, அருணாச்சலப்பிரதேசம், மிசோரம் ஆகிய மூன்று மாநிலங்களில் நடைமுறையில் உள்ளது.

**வழிமுறைகள்** 1.5

- ILP மாநிலத்திற்குள் பிற மாநிலத்தை சேர்ந்தவர்கள் அனுமதியின்றி நுழைய முடியாது.
- நேரடியாகவோ (அ) இணையதளம் மூலமாகவோ நுழைவுச் சீட்டினை பெறலாம்.

**b) ரோஷினி திட்டம்** 3

- இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட 24 மாவட்டங்களில் உள்ள கிராமப்புற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு திட்டம்
- MORD என்ற அமைப்பால் செயல்படுத்தப்படுகிறது.
- மத்திய மாநில நிதிப்பகிர்வு 75 : 25
- நீண்டகால முழு உறைவிட பயிற்சித் திட்டம்
- அடுத்த மூன்று ஆண்டுகளில் 24 மாவட்டங்களை சேர்ந்த 50000 இளைஞர்களுக்கு பயிற்சியளிக்கும்.
- தனியார், அரசு மற்றும் அரசுசாரா நிறுவனங்களின் கூட்டுத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பகுடுறது.

**10) தேசிய குற்றப்பதிவு முகமை விளக்குக**

**தேசிய குற்றப்பதிவு முகமை - 1986** 3

- குற்றங்களை தடுப்பதற்கும், கண்டறிவதற்கும் காவல்துறையில் தேசிய குற்றப்பிரிவு முகமை முக்கியப் பங்கு வகிக்கிறது.
- தேசிய காவல் ஆணையம் (1977 - 81) & ன் பணிக்குழு (1985) பரிந்துரையின் அடிப்படையில் அமைக்கப்பட்டது.
- உள்துறை அமைச்சகத்தின்கீழ் செயல்படுகிறது.
- தலைமையகம் புதுடெல்லி

**செயல்பாடுகள்** 3

- தேசிய மற்றும் சர்வதேச அளவில் நடைபெற்ற குற்றம் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தகவல்களின் தொகுப்பு மையமாக செயல்படுகிறது.
- இத்தகவல் தொகுப்பின்மூலம் தேசிய, சர்வதேச குற்றங்களுக்காக வழக்கறிஞர்களுக்கு உதவுகிறது.
- தேசிய அளவில் குற்றப் புள்ளி விவரங்களைச் சேகரித்து செயலாக்கம் செய்கிறது.
- அபராதம் மற்றும் திருத்தம் செய்யும் முகவர்களிடம் இருந்து தரவைக் பெறுதல் மற்றும் வழங்குதல்

SURESH'

- குற்றவாளிகளின் மறுவாழ்வு, தடுப்புக் காவல், பரோல் முன்கூட்டிய விடுதலை போன்ற தகவல்களை சேர்த்து வைக்கிறது.

**11) ஆணவக்கொலை என்ற பதத்தை விளக்குக.**

**ஆணவக்கொலை** 2

- குடும்ப கௌரவத்தை நிலைநாட்ட பெண்கள் (அ) ஆண்கள் அவர்களின் குடும்பத்தைச் சார்ந்த நபர்களை கொலை செய்வது ஆணவக் கொலையாகும்.
- குடும்பத்தின் விருப்பத்திற்கு மாறாக திருமணம் செய்ததற்காகவோ (அ) திருமணத்திற்கு முந்தைய உறவை வைத்ததற்காகவோ, அவர்களின் சமூகத்திற்கு வெளியே திருமணம் செய்து கொள்வதற்காகவோ செய்யப்படும் கொலை.

**காரணங்கள்** 2

- சாதி அமைப்பின் இறுக்கம்
- கல்வியறிவின்மை
- உரிமைகள் பற்றிய விழிப்புணர்வின்மை
- சமூகத்தில் கௌரவம் மற்றும் அந்தஸ்து இழக்கும் ஆபத்து
- 2015இல் இந்தியளவில் 251 ஆணவக்கொலைகள் பதிவாகியுள்ளன.
- தென்னிந்தியாவில் அதிக அளவில் உள்ளது.

**சட்ட விதிகள்** 2

- விதி 14, 15, 19, 21 மற்றும் 391 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றங்கள் பதிவு செய்யப்படுகின்றன.

**சட்ட அம்சங்கள்**

- மரியாதை மற்றும் பாரம்பரியம் என்ற பெயரில் குற்றங்களை தடுக்கும் மசோதா 2010.

**12) அமில வீச்சு தாக்குதல் என்றால் என்ன?**

**அமில வீச்சுத் தாக்குதல்** 1

- பெண்களின் மீது மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும் வன்முறையின் ஒரு வடிவமாகும்.
- இது சமூகத்தில் நிலவும் பெண்கள் மற்றும் சிறுமிகளின் மீதான பாகுபாட்டைப் பிரதிபலிக்கிறது.

**காரணங்கள்** 2

- வலிமைமிகு அமிலங்களின் விலை குறைவு மற்றும் எளிதாக கிடைக்கிறது.
- வாங்குவதற்கும் விற்பதற்கும் எந்த சட்ட கட்டுப்பாடுகளும் விதிக்கப்படுவதில்லை.
- நீண்ட நாள் பாதிப்பை உருவாக்கும் எண்ணம்
- நிராகரிக்கபபட்ட காதலர்களின் பழிவாங்கும் எண்ணம்

**நிர்வாக நடவடிக்கை** 2

- பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான குற்றங்களின் (அமிலம் மூலம்) நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்கான திட்டம்
- இது பாதிக்கப்பட்டவரின் சிகிச்சைக்காக 50000 ரூபாய் வழங்குகிறது.
- வர்மா கமிட்டி IPC ல் புதியப் பிரிவுகளைச் சேர்க்க பரிந்துரைத்தது.
- அமிலங்களால் ஏற்படும் குற்றங்களை தடுக்கும் சட்டம் மசோதா) 2008.

**சட்ட விதிகள்** 1

- இந்திய தண்டனைச் சட்டம் –பிரிவு 326 (A) மற்றும் 326 (B) அமிலங்களால் ஏற்படும் தாக்குதலுக்காக உருவாக்கப்பட்டது.

**13) மனித உரிமைகள் என்றால் என்ன? மனித உரிமைகளை பாதுகாத்திட ஐ.நாவின் முயற்சிகளை விரிவாக மதிப்பிடுக.**

**மனித உரிமைகள்** 2.5

- மனித உரிமைகள் என்பது அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரமாக வாழ்வது.
- இது பிறந்தது முதல் இறப்பு வரை அனைவருக்கும் பொருந்தும்.
- மனித உரிமைகள் இனம், பாலினம், தேசியம், மொழி அல்லது வேறு எந்த தகுதியையும் பொருட்படுத்தாமல் அனைத்து மனிதர்களுக்கும் உள்ளார்ந்த உரிமைகளை வழங்குகிறது.

**ஐ.நாவின் மனித உரிமைகள் பிரகடனம்** 1

- இது வரைவு செய்யப்பட்டு 501 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- உலகில், அதிகமாக மொழிப்பெயர்க்கப்பட்ட ஆவணமாகும்.

**எடுக்கப்பட்ட முயற்சிகள்** **2.5**

- மனித உரிமைகள் மசோதா, ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை 1948ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் - 1ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- மனித உரிமைகள் பொதுப் பிரகடனம் என அறியப்படுகிறது.
- அப்பிரகடனத்தில் 30 விதிகள் உள்ளன.
- 1993ஆம் ஆண்டு தேசிய மனித உரிமைகள் ஆணையம் புதுதில்லியில் அமைக்கப்பட்டது.
- தமிழ்நாட்டில் மாநில மனித உரிமைகள் ஆணையம் 1997இல் உருவாக்கப்பட்டது.
- பெண்களுக்கு எதிரான அனைத்து சமூக நடவடிக்கைகளுக்கும் கண்டனம் தெரிவித்தது.
- மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமையை மீட்டெடுக்கும் முயற்சியாக 2006ஆம் ஆண்டு மாநாடு நடத்தப்பட்டது.
- 60 ஆண்டுகள் கடந்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையம் மார்ச் 15, 2006 முதல் மனித உரிமைகள் சபையாக மாற்றம் செய்யப்பட்டது.

**14) இந்தியாவில் உள்ள மனித உரிமை நீதிமன்றங்கள் பற்றி விரிவாக குறிப்பு வரைக.**

**இந்தியாவில் உள்ள மனித உரிமை நீதிமன்றங்கள்**

- ஒரு தனிநபரின் அடிப்படை உரிமைகளை நிலை நிறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் **1**
- மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டம் - 1993ன் கீழ்
- மனித உரிமை நீதிமன்றங்களை மாவட்ட அளவில் நிறுவுவது இதன் நோக்கமாகும்.

**பின்னணி** **2**

- 2001 முதல் 2010 வரை, தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NHRC) நாட்டில் 14,231 பேர் போலீஸ் மற்றும் நீதிமன்ற காவலில் இறந்துள்ளனர் என்று பதிவு செய்தது.
- இந்திய மனித உரிமைகள் அறிக்கை - 2018 பல்வேறு மனித உரிமை மீறல்களை வெளிச்சம் போட்டு காட்டியது.

**சட்டப்பிரிவுகள்** **2**

- பிரிவு 30 - மனித உரிமைகள் நீதிமன்றத்தை நிறுவுவதற்கான சட்டத்தின் பிரிவு
- பிரிவு 31 - சிறப்பு அரசு வழக்கறிஞர் நியமனம்

**குறைபாடுகள்** **1**

- எந்த வகையான குற்றங்கள் உண்மையில் மனித உரிமைகள் நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டும் என்பதற்கான தெளிவான குறிப்பை இந்த சட்டம் வழங்கப்படவில்லை.
- மத்திய அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

**15) தகவல் உரிமைச்சட்டத்தின்படி மேல்முறையீட்டு அதிகாரி யார்? அவர்கள் விண்ணப்பத்தினை நிராகரிப்பதற்கான காரணங்கள்?**

- மேல்முறையீடு அதிகாரி, பொதுத் தகவல் அலுவலரிடம் கோரிக்கைகளை சமர்ப்பிக்க இயலாமை குறித்து மக்கள் அளிக்கும் புகார்களை கவனிக்க வேண்டும். **1.5**

**முதல் முறையீடு** **1.5**

- காலாவதியான தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் அல்லது முடிவு கிடைத்ததிலிருந்து மூத்த தரவரிசையில் உள்ள மத்திய பொதுத் தகவல் அதிகாரி (அ) மாநில பொதுத் தகவல் அதிகாரியிடம் முதல் முறையீடு செய்யலாம்.
- பொதுத் தகவல் அதிகாரி ((PIO) எடுத்த முடிவிற்கு எதிரான மூன்றாம் தரப்பு மேல்முறையீடு முடிவெடுத்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும்.

**இரண்டாவது மேல்முறையீடு** **1**

- மத்திய தகவல் ஆணையம் அல்லது மாநில தகவல் ஆணையம் 90 நாட்களுக்குள் தீர்வு வழங்கிட வேண்டும்.

**தண்டனை விதிகள்** **2**

- பின்வரும் காரணங்களுக்காக எந்தவொரு பொது தகவல் அலுவலருக்கும் ரூ250 முதல் அதிகபட்சம் 25000 வரை அபராதம் விதிக்கப்படும்.
- விண்ணப்பத்தைப் பெற மதிப்பது
- குறிப்பிட்ட நேரத்திற்குள் தகவல்களை வழங்காமல் இருப்பது
- கோரப்பட்ட தகவலை அழித்தல்
- தகவலுக்கான அணுகலைத் தடுத்தல்

**16) தகவல் அறியும் உரிமைத் திருத்தச் சட்டம் 2019 பற்றி விளக்குக.**

**தகவல் அறியும் உரிமை திருத்தச் சட்டம் 2019** **2**

- தகவல் அறியும் உரிமை சட்டத்தின் பிரிவுகள் 13, 16 மற்றும் 27ஐ திருத்தம் செய்தது.

SURESH

- ஜூலை 19, 2019 அன்று பொதுமக்கள் குறைகள் மற்றும் ஓய்வூதியத் துறை இணை அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் அவர்களால் மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

**முக்கிய அம்சங்கள்** 2

- தேசிய மற்றும் மாநில அளவில் தலைமை தகவல் ஆணையம் மற்றும் தகவல் ஆணையர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.
- பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள்
- பதவி நீக்குவதற்கான வழிமுறைகளை மத்திய அரசாங்கம் வழங்குகிறது.
- தலைமை தேர்தல் ஆணையம் மற்றும் தேர்தல் ஆணையர்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்படும்.

**முக்கிய நோக்கம்** 2

- இந்தியா போன்ற ஜனநாயக நாட்டில் அரசிடமிருந்து தகவல் பெறுவது மக்களின் உரிமையாகும்
- ஊழலைக் குறைக்கிறது.
- அரசு சேவைகள் மற்றும் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மை

**அலகு - 2**

**1) இந்தியாவில் வகுப்புவாதத்திற்கான காரணங்களை மதிப்பிடுவதுடன் அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளைக் கூறுக.**

**இந்தியாவில் வகுப்புவாதம்** 1

- இந்தியாவின் பன்மைத்துவ சமூகம் என்பது பல மதக்குழுக்களால் மட்டுமே அமைந்தது அல்ல, பல உட்பிரிவுகளையும் மதங்களுக்குள் கொண்டுள்ளது.
- ஆங்கில அரசாங்கத்தின் பிரித்தாளும் கொள்கை அவர்களின் காலனித்துவ நலனுக்கு சேவை செய்தது.
- மதச்சார்பற்ற மற்றும் மக்களிடையே சமத்துவ கொள்கைகளை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது.

**வகுப்புவாதத்தின் காரணங்கள்** 10

**1. சிறுபான்மையினரின் போக்கு**

- சில முஸ்லீம்கள் தேசியவாத போக்குகளில் கலந்து கொள்ள மறுத்துவிட்டனர்.
- தனி அடையாளங்களை தக்க வைக்க விரும்பினர்.
- தேசிய நெறிமுறைகளை உருவாக்க தவறிவிட்டனர்.

**2. மரபுவழி மற்றும் தெளிவின்மை**

- மரபுவழி சார்ந்த எண்ணம் கொண்டவர்கள்
- தங்களுடைய சொந்த கலாச்சார முறை, தனிப்பட்ட சட்டங்கள் மற்றும் எண்ணங்களுடன் ஒரு தனித்துவமான அமைப்பைப் பெற்றுள்ளனர்.

**3. தலைவர்களின் வடிவமைப்பு**

- வகுப்புவாத தலைவர்கள் தங்களின் விருப்பத்திற்கேற்ப வகுப்புவாத எண்ணங்களை தங்கள் சமூகத்திற்குள் வளரச் செய்தனர்.
- தனித் தொகுதிக்கான கோரிக்கையும், முஸ்லீம் லீக் அமைப்பும் வகுப்புவாத சிந்தனையுடன் நடைமுறை வெளிப்பாடு.

**4. பலவீனமான பொருளாதார நிலை**

- பெரும்பான்மையான இஸ்லாமியர்கள் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்வியை ஏற்க தவறவிட்டனர்.
- இந்த உணர்வானது வகுப்புவாதத்தின் விதையை உள்ளடக்கியிருந்தது.

**5. புவியியல் காரணங்கள்**

- வெவ்வேறு மதக் குழுக்களின் பிராந்தியக் குடியேற்றம் இந்துக்கள் இசுலாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை நிலை, சமூக தரநிலைகள் மற்றும் நம்பிக்கை அமைப்புகளில் மாறுபாட்டை ஏற்படுத்தின.

**6. வரலாற்று காரணங்கள்**

- தாழ்த்தப்பட் மக்களை சமூகத்திலிருந்து பிரித்தல்
- கல்வியறிவின்மை, வறுமை போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருந்தால்
- ஆட்சி செய்த வெளிநாட்டவர்கள் தாழ்த்தப்பட்டவர்களுடன் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளவில்லை.

**7. வெகுஜன ஊடகத்தின் எதிர்மறை தாக்கங்கள்**

- பொது அமைதிக்கு ஊறு விளைவிக்கும் அல்லது கலவரத்தை தூண்டும் குறுஞ்செய்திகள் இதன் வாயிலாப நாடு முழுவதும் பரப்பப்படுகிறது.

**வகுப்புவாதத்திற்கான நடவடிக்கைகள்** 1

- அமைதிக் குழுவை நிறுவுதல்

- ஊடகங்களின் மேற்பார்வை
- வகுப்புவாத அரசியல் கட்சிகளை ஒழித்தல்
- புதிய உத்திகளைப் பயன்படுத்துதல்
- ஆரோக்கியமான பொதுக் கருத்தை ஊக்குவித்தல்
- கட்டாய மதமாற்றத்திற்கு எதிரான சட்டம்
- சட்ட அமலாக்கம்
- வகுப்புவாதத்தை தடுத்தல்

**2) இந்தியாவில் பிராந்தியவாதத்தை தீவிரமாக மதிப்பிடுக**

**<u>இந்தியாவில் பிராந்தியவாதம்</u>** **1**

- தனித்துவமிக்க மொழி, கலாச்சாரம் போன்ற கூறுகளால் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழக்கூடிய மக்களின் அடையாளத்தை இயல்பாகக் கொண்டுள்ளது.

**<u>நேர்மறையாக எண்ணம்</u>** **10**

- சகோதரத்துவத்தை வளர்த்தல், பாதுகாப்பை நாடுவதில் உள்ள ஒற்றுமை நலமாக இருக்கும் நிலையை வளர்த்தல், அங்குள்ள மக்களை வளர்ச்சியடைச் செய்தல்

**<u>எதிர்மறை எண்ணம்</u>**

- ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தின் மீது கொண்ட அதிகப்படியான இணைப்பு ஒரு நாட்டின் ஒற்றுமை மற்றும் இறையாண்மைக்கு அச்சுறுத்தலாக உள்ளது.

**<u>வரலாறு</u>**

- பிராந்திய உணர்வின் வேர்களை காலனித்துவ கொள்கைகளில் காணலாம்.
- ஆங்கிலேய அரசு சுதேச அரசுகளுக்கிடையே வேறுபட்ட அணுகுமுறையை கொண்டிருந்தது.
- ஆங்கிலேய அரசு மேற்கொண்ட சுரண்டல் பொருளாதார கொள்கை
- இந்திய தேசியஇயக்கம் பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவை கட்டமைத்தது.
- மாநிலங்களின் மொழி ரீதியான மறுகட்டமைப்பிற்கான வழிவகைகளை செய்தது.

**<u>பிராந்தியவாத இயக்கத்தின் வகைகள்</u>**

- பிரிவினைவாதம் என்பது பிராந்தியவாதத்தின் ஒரு வடிவமாகும்.
- போர்குணத்தை உள்ளடக்கியது.
- ஜம்மு & காஷ்மீரில் உள்ள இஸ்லாமிய அடிப்படைவாத குழுக்கள் அசாமில் உள்ள உல்ஃபா போன்றவை பிராந்தியவாதத்தின் தீவிர பரிமாற்றத்திற்கு எடுத்துக்காட்டுகளாகும்.
- துணை பிராந்தியவாதம் 1956இல் இயற்றப்பட்ட மாநில மறுசீரமைப்புச் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.
- மாநிலங்களுக்குள் உள்ள மொழிவாரி (அ) இன சிறுபான்மையினர் பெரும்பான்மை சமூகத்திற்கு எதிராக அணிசேர்கின்றனர்.

**<u>வகுப்புவாதத்தின் வளர்ச்சி</u>**

- இருபக்க வளர்ச்சி
- வரலாற்று மற்றும் புவியியல் தனிமைப்படுத்துதல்
- ஒரு பிராந்தியத்தின் தொடர்ச்சியாக புறக்கணிப்பு
- உள்நாட்டு காலனித்துவம்

**<u>பிராந்தியவாதத்தின் காரணங்கள்</u>** **1**

- பிராந்திய கட்சிகளின் எழுச்சி
- பிராந்திய பிரச்சினைகளில் கவனம் செலுத்தவில்லை.
- பிராந்தியவாதப் போக்கு மாநிலங்களுக்கிடையே பகைமையை தூண்டுகின்றன.
- சில நேரங்களில் தேசிய நலனைக் குறைக்கிறது.
- அடிக்கடி வன்முறை மற்றும் கிளர்ச்சிகளை விளைவிக்கின்றன.
- அரசியல் தலைமையின் கருத்து வேறுபாடு

**3) ஆயுதப்படைகள் (சிறப்பு அதிகாரங்கள்) சட்டம் 1958 என்பது என்ன? சமீபத்தில் அது பற்றிய செய்திகளுக்கான காரணம் என்ன? விளக்குக.**

- நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது. **2**
- வடகிழக்கு மாநிலங்களில் வன்முறை அதிகரித்து வரும் சூழலில் இச்சட்டம் நடைமுறைக்கு வந்தது
- ஆயுதப்படை சிறப்பு அதிகாரச்சட்டம் 1958 என அறியப்பட்டது.

**<u>செயல்பாடுகள்</u>** **2**

- ஆயுதப்படைகளுக்கு சீர்குலைந்த பகுதியாக பொது ஒழுங்கை பராமரிக்கும் அதிகாரத்தை வழங்குகிறது.

SURESH'

- ஒரு பகுதியில் 5 (அ) அதற்கு மேற்பட்ட நபர்கள் கூடுவதை தடை செய்யும் அதிகாரம் உள்ளது.
- உரிய எச்சரிக்கைக்குப் பிறகு, பலத்தை பயன்படுத்தலாம் அல்லது துப்பாக்கிச் சூடு நடத்தலாம்.
- நியாயமான சந்தேகம் இருந்தால், இராணுவ உத்தரவு இல்லாமல் ஒரு நபரை கைது செய்யலாம்.

**தற்போதைய செய்திகள்** 6

- மோன் மாவட்டத்தில் பொதுமக்கள் கொல்லப்பட்டதால் நாகாலாந்து, AFSPA அரசு சட்டத்தை திரும்பப்பெற வலியுறுத்தியது.
- மோன் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் 13 பொதுமக்களை சுட்டுக் கொன்றதற்கு பிறகு ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் 1958ஐ மாற்ற நாகாலாந்து அமைச்சரவை பரிந்துரைத்தது.
- இச்சட்டத்தை திரும்பப்பெறுவது வடகிழக்கு இந்தியாவின் நீண்டகால போராட்டமாகும்.
- துப்பாக்கிச் சூட்டிற்கு பின் நாகாலாந்து, முதலமைச்சர் நிபுயூ ரியோ மற்றும் மேகாலயா முதலமைச்சர் கொன்றாங் சர்மா இச்சட்டத்தினை திரும்பப்பெற வலியுறுத்தினர்.

**பாதிக்கப்பட்ட பகுதிகள்**

- பிரிவு 3இன் கீழ் அறிவிக்கப்படும் பகுதிகள்
- அதிகாரப்பூர்வ அரசிதழில் நிலையான அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.
- நாகாலாந்து, அசாம், மணிப்பூர் மற்றும் அருணாச்சலப்பிரதேசத்தின் சில பகுதிகளிலும் பயன்பாட்டில் உள்ளது.
- ஏப்ரல் 1, 2018 அன்று மேகாலயாவில் இரத்து செய்தது.
- முன்னதாக, ஆனது 20 கி.மீ அசாம், மேகாலயா பகுதிகளில் சிறப்பாக செயல்பட்டது.
- அருணாச்சலாப் பிரதேசங்களில் 16 காவல்நிலையங்களுக்கு பதிலாக 8 காவல் நிலையங்களாக குறைக்கப்பட்டது.

**எதிரான கருத்துக்கள்** 1

- மனித உரிமைக்கு எதிரானது
- காலனித்துவ சட்டம்
- சரியான தீர்வு இல்லாதது
- பணியாளர் பாதுகாப்பு குறைபாடு

**குழுக்கள்** 1

- பி.பி. ஜீவன் ரெட்டி 2005
- சந்தோஷ் ஹெக்டே கமிட்டி 2013

**4) கும்பல் வன்முறை என்பது என்ன? எவ்வாறு அதனைக் கட்டுப்படுத்துவது? ஆய்க.**

**கும்பல் வன்முறை** 2

- இது வன்முறையின் ஒரு வடிவமாகும்.
- இதில் ஒரு கும்பல் விசாரணையின்றி நீதியை நிர்வகிப்பதற்காக ஒரு குற்றவாளி என்று கருதப்படும் ஒருவரை சித்தரவதை செய்து பிறகு தூக்கிலிடச் செய்தலாகும்.
- முறைசாரா குழுவால் ஒருவரை சட்டத்திற்கு புறம்பாக தண்டித்தல்
- பாரபட்சம், சகிப்புத்தன்மை, சட்டத்தின் ஆட்சி மீதான அலட்சியம் போன்றவற்றின் வெளிப்பாட்டினை இந்தக் குழுக்கள் நிறைவேற்றுகின்றன.

**காரணங்கள்** 10

**1. கும்பலின் உளவியல்**

- உண்மையான குற்றவாளிகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு கடினமான தண்டனை வழங்கப்படும் என்ற அச்சம் மக்களுக்கு குறைவாக உள்ளது.

**2. அரசியல் ஆதரவு**

- வாக்கு வங்கிக்காக அரசியல்வாதிகள் வன்முறையை ஒரு விளையாட்டாக பயன்படுத்துகின்றனர்.

**3. நிர்வாகத் தோல்வி**

- குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதில்லை.
- சமூக ஊடகங்களின் வதந்திகள் கட்டுப்படுத்தப் படுவதில்லை.
- முகப்புத்தகம், புலனம் மூலம் தவறான தகவல்கள்
- பிரச்சாரப்படுத்தப்படுவதை கட்டுப்படுத்த இயலாமை

**4. சமூகக் காரணம்**

- போக்குகளை பகுப்பாய்வு செய்வதற்கான தரவுதளம் இல்லை.

**கட்டுப்பாடு நடவடிக்கைகள்**

**1. சட்டம்**

- கும்பல் கொலை நிகழும் பகுதியில் தேசிய சட்டம் இயற்றப்பட வேண்டும்.
- ஜாமீனில் வெளிவரமுடியாத அளவிற்கு சட்டங்களை உருவாக்க வேண்டும்.

**2. உடனடித் தீர்வு**

- உடனடி நீதிமன்றங்கள் மூலம் ஆறுமாத காலத்திற்குள் தீர்ப்பினை வழங்க வேண்டும்.

**3. மாநில நடவடிக்கைகள்**

- கும்பல் வன்முறைகள் மற்றும் கொலைகள் பதிவாகியப் பகுதியை அடையாளம் காண வேண்டும்.
- ஊடகங்களின் மூலம் இது குறித்தான தகவல்களை விழிப்புணர்வு செய்ய வேண்டும்.

**4. இளைஞர்களை ஈடுபடுத்துதல்**

- 29 வயதிற்கு கீழ் இச்செயல்களில் ஈடுபடுபவர்கள் சரியான வழிகாட்டுதல் மூலம் அவர்களை மீண்டும் வரச் செய்தல் வேண்டும்.
- ஆசிரியர்கள், பள்ளி நிர்வாகம் மாணவர்களுக்கிடையே இதுகுறித்தான விழிப்புணர்வுகளையும் பாதுகாப்பிற்கான வழிமுறைகளையும் வழங்க வேண்டும்.

**5) இந்தியாவில் நிலவும் பயங்கரவாதத்தின் வகைகள் பற்றி குறிப்பிடுக.**

**பயங்கரவாதத்தின் வகைகள்**

**1. மாறுபட்ட பயங்கரவாதம்** 4

- அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்யும் குழுக்கள்
- எ.கா இலங்கையில் உள்ள விடுதலைப் புலிகள்

**2. மத பயங்கரவாதம்** 8

- மத சித்தாந்தங்களை அடிப்படையாகக் கொண்ட பயங்கரவாத குழுக்கள். (எ.கா) ISIS

**இடதுசாரி / வலதுசாரி பயங்கரவாதம்**

- அரசியல் முடிவில் கருத்தியல் சார்புகளை கடைபிடிக்கும் பயங்கரவாத குழுக்கள்

**4. குற்றவியல் பயங்கரவாதம்**

- குற்றவியல் லாபத்திற்காக பயங்கரவாத செயல்களில் ஈடுபடுகின்றன.

**5. எல்லை தாண்டிய பயங்கரவாதம்**

- அண்டை நாடுகளின் நிதி உதவிகளினால் நடைபெறும்.
- இணைய வழி பயங்கரவாதம் போன்ற செயல்பாட்டு முறையின் அடிப்படையிலும் பயங்கரவாதத்தை வகைப்படுத்தலாம்.

1. நுண்துளை எல்லைகள்
2. அரசு சார்பற்ற நிறுவனங்களின் ஆதரவு
3. உள் ஆதரவு
4. ஊழல் அதிகாரிகள்

**இந்தியாவில் தீவிரவாதம்**

- கிழக்கு, மத்திய மற்றும் தென் மத்திய இந்தியாவிலுள்ள இடதுசாரி தீவிரவாத குழுக்களிடமிருந்தும் இந்தியா பயங்கரவாதத்தை எதிர்கொள்கிறது.
- உலகில் தீவிரவாதத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்று.
- பொருளாதார மற்றும் அமைதிக்கான நிறுவனம் 2018இல் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில் இந்தியா 7ஆவது இடத்தில் உள்ளது எனக் கூறியுள்ளது.
- 2001 முதல் 2018 வரை 8000க்கும் மேற்பட்டோர் தீவிரவாதத் தாக்குதல்களில் உயிரிழந்துள்ளனர்.
- தீவிரவாதச் செயல்களில் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதி ஜம்மு & காஷ்மீர்
- மும்பை மீதான தாக்குதலுக்குப் பிறகு அரசாங்கம் தேசிய புலனாய்வு முகமை (NIA) உருவாக்கப்பட்டது.
- தேசிய பாதுகாப்புப் படை (NSG) என்பது ஒரு துணை இராணுவப் படையாகும்.
- இது பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் கடத்தல் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு முதன்மைப் பொறுப்பாகும்.

**6) தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தோற்றம்: அமைப்பு, பணிகள் (ம) அதிகாரங்களை விவரித்து எழுதுக.**

**தோற்றம்** 2

- 1993, சட்ட அமைப்பு

SURESH

- மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993இன்படி உருவாக்கப்பட்டது.
- 2006இல் திருத்தப்பட்டது.

**அமைப்பு** 3

- பல உறுப்பினர்கள் கொண்ட அமைப்பாகும்.
- 1 தலைவர்
- 4 உறுப்பினர்கள்
- உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி இதன் தலைவராக இருப்பார்.
- உச்ச உயர் நீதிமன்றங்களில் பணியாற்றும் (அ) ஓய்வு பெற்ற நீதிபதிகள் 2 பேர், மனித உரிமைகள் தொடர்பான அனுபவம் வாய்ந்த இருவர்

**பதவிவழி உறுப்பினர்கள்**

- தேசிய சிறுபான்மையினர் ஆணையத் தலைவர்
- தேசிய தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின ஆணையத்தின் தலைவர்
- மகளிர் ஆணையத் தலைவர்

**ஆணையத்தின் பணிகள்** 3.5

- மனித உரிமையை மீறுதல் (அ) பணியில் அலட்சியம் போன்ற குற்றச்சாட்டுகளை தானாக முன்வந்தோ மனுதாக்கல் செய்யப்பட்டதன் அடிப்படையிலோ விசாரணை செய்தல்.
- மனித உரிமை மீறல் தொடர்பான நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளில் தலையிடுதல்
- சிறைகளில் கைதிகளின் வாழ்நிலையை ஆய்வு செய்து பரிந்துரைகள் வழங்குதல்
- மனித உரிமைப் பாதுகாப்பு தொடர்பான வழக்குகளை மறுபரிசீலனை செய்து பரிந்துரைகள்வழங்குதல்
- மனித உரிமைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்
- விழிப்புணர்வை பரப்புதல்

**அதிகாரங்கள்** 3.5

- மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993 – பிரிவு 13 அதிகாரத்தைப் பற்றி கூறுகிறது.
- சாட்சிகளை வரவழைத்தல் மற்றும் அமலாக்கம் செய்தல் மற்றும் சாட்சிகளை முன்வைத்தல்
- எந்த ஆவணத்தையும் கண்டறிதல் மற்றும் தயாரித்தல்
- எந்தவொரு நீதிமன்றத்திலும் (அ) அலுவலகத்திலும் ஏதேனும் பொதுப் பதிவேடு (நகலைக் கோருதல்
- சாட்சிகள் (அ) ஆவணங்களை விசாரணைக்காக ஆணையங்களை அமைத்தல்

**வெளியிடும் ஆணையம்**

- விசாரணை தொடர்பான தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் அதிகாரங்கள் குறித்து மனித உரிமைகள் பாதுகாப்பு சட்டம் 1993 பிரிவு 14இன் கீழ் கூறப்பட்டுள்ளது.

**7) இந்தியாவில் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சனைகளில் அரசு சாரா நிறுவனங்களின் பங்களிப்பு குறித்து எழுதுக.**

- பொதுக் கருத்தைத் திரட்டுதல் 12
- கைதிகளின் உரிமைகளைப் பாதுகாத்தல், சித்திரவதை போன்ற மனித மீறல்கள் தொடர்பான பிரச்சனைகளில் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தல்
- நீதி கிடைக்காத ஏழை மக்களின் சார்பாக நீதித்துறையை அணுகுதல்
- சில அறிக்கைகளை சமர்ப்பிக்கும்படி கோருதல்
- உதவி வழங்குதல்
- மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- மனித உரிமை விதிமுறைகளை உருவாக்குதல் மற்றும் மனித உரிமைகள் தரநிலைகளை அமைப்பதில் பங்களிப்பு செய்தல்
- தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் பயிற்சி
- மனித உரிமை மீறல் பற்றிய ஆராய்ச்சி, ஆவணப்படுத்துதல் மற்றும் அறிக்கை வெளியிடுதல்

**மனித உரிமைக்காக பணியாற்றும் முக்கிய NGO க்கள்**

- மனித உரிமைகளுக்காக செயல்படும் முக்கியமான அரசு சாரா நிறுவனங்கள்
- ராமகிருஷ்ணா மிசன் ஹோம் ஆஃப் சர்வீஸ் சிவில் லிபர்டி மக்கள் ஒன்றியம்
- ஜனநாயக உரிமைகளுக்கான மக்கள் ஒன்றிஷயம் குழந்தைகள் உரிமை
- பந்துவர் முக்தி மோர்ச்சா

SURESH'

8) மத்திய தகவல் ஆணையம் மற்றும் மாநில தகவல் ஆணையம் பற்றி விளக்குக.

**மத்திய தகவல் ஆணையம்** 2

- 2005
- மத்திய அரசால் நிறுவப்பட்டது.
- தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 விதிகளின் கீழ் - அரசியலமைப்பின் பகுதி அல்ல.

**உறுப்பினர்கள்** 2

- ஒரு தலைமை தகவல் அதிகாரி மற்றும் அதிகபட்சம் பத்து தகவல் ஆணையர்கள்

**நியமனம்**

- பிரதமர், மக்களவையின் எதிர்க்கட்சித்தலைவர் மற்றும் மத்திய அமைச்சரவை ஆகியோரைக் கொண்ட குழுவின் பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர்.

**பதவிக்காலம்** 3

- தலைமை காவல் ஆணையர் மற்றும் ஒரு தகவல் ஆணையர் ஆகியோர் மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட காலத்திற்கு அல்லது 65 வயதை அடையும்வரை
- அவர்கள் மறுநியமனம் பெற தகுதியற்றவர்கள்
- திறன் மற்றும் செயல்பாடுகள்

**அதிகாரம்** 2.5

- தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005இன் கீழ் கோரப்பட்ட தகவல் தொடர்பாக எந்த ஒரு நபரிடம் இருந்தும் புகாரினைப் பெற்று விசாரணை மேற்கொள்ளுதல்
- நியாயமான காரணங்கள் இருந்தால் எந்த விஷயத்திலும் விசாரணைக்கு உத்தரவிடலாம்.

**மாநில தகவல் ஆணையம்** 2.5

- மாநில அரசால் உருவாக்கப்பட்டது.
- ஒரு தலைமை தகவல் ஆணையர் மற்றும் பத்திற்கும் குறைந்த தகவல் ஆணையர்கள்
- முதலமைச்சரை தலைமையாகக் கொண்ட குழுவின் பரிந்துரையின் பேரில் ஆளுநர் நியமிக்கிறார்.

அலகு 3

1) பயங்கரவாதம் வரையறு. அதன் காரணிகளை குறிப்பிடுவதுடன் அதனை வகைப்படுத்துக.

**பயங்கரவாதம்** 2

- ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை தீர்மானம் 1966 (2004)ன் படி, பயங்கரவாதம் என்பது பொதுமக்களுக்கு எதிரான குற்றச் செயல்களை உள்ளடக்கியது.
- மரணம் அல்லது கடுமையான உடல் காயம் அல்லது பணயக் கைதிகளாக எடுக்கும்
- நோக்கத்தோடு செயல்படும்,

**முக்கிய காரணங்கள்** 5

- நாடு அல்லது குழுவிற்கு எதிரானது.
- அரசியல் காரணங்கள் இருக்கும்.
- இது தவறானது மற்றும் சட்டத்திற்கு புறம்பானது.
- அடிபணியச் செய்தல் (அ) வற்புறுத்தல் மூலம் பாதிக்கப்பட்டவர்களின்றி மற்ற மக்களையும் பயம் மற்றும் பீதி அடையச் செய்வது
- இயலாமை உணர்வுடன் தொடர்புடையது.
- பகுத்தறிவு சிந்தனையை நிறுத்துகிறது
- பதட்டமான சூழலை தக்கவைத்து கொள்கிறது.
- தன்னிச்சையானது அனைவரையும் பாதிக்கப்பட்டவர்களாக மாற்றும் தன்மையுடையது.

**நோக்கங்கள்** 5

- அரசாங்கத்திற்கு எதிர்வினை ஆற்றச் செய்வது
- தங்களது விருப்பத்தை அரசாங்கம் / சமூகம் ஆகியவற்றை ஒப்புக்கொள்ள நிர்பந்திக்கிறது.
- எதிரிகள் (அ) தகவல் தருபவர்களை நீக்குதல் மற்றும் அவர்களை பின்பற்றுபவர்களின் கீழ்படிதலை உறுதி செய்தல்
- நோக்கத்தை விளம்பரப்படுத்துதல் மற்றும் பெரிதாக்குதல்
- இவர்களது நாட்டின் அல்லது சமூகத்தின் உள்நிலைத்தன்மையை நகர்த்தல் மற்றும் அவற்றின் வளர்ச்சியை கண்காணித்தல்
- திசைதிருப்புதல் மற்றும் மக்களை உளவியல் ரீதியாக பிரித்தல்

SURESH'

- அதிக அளவில் திறனை தூண்டி மக்களை பங்குபெறச் செய்தல்

**டைம் இதழின் இதழாளர் ஜெய் மல்லின் கூற்றுப்படி ஐந்து முதன்மையாக குறுகிய கால நோக்கங்கள் உள்ளன. அவை** 3

1. அணிகளுக்குள் மன உறுதியை உருவாக்குதல்
2. இயக்கத்தை விளம்பரப்படுத்துதல்
3. திசை திருப்புதல் மற்றும் மக்களை உளவியல் ரீதியாக பிரித்தல்
4. எதிரி சக்திகளை அழித்தல்
5. அரசாங்கத்தை தூண்டுதல்

**2) பயங்கரவாத செயல்பாடுகளுக்கு எதிராக இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தியம்புக.**

**ஆபரேசன் புளுஸ்டார்** 15

- 1984
- இராணுவ நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்டது.
- இந்திரா காந்தி அவர்களால் ஏற்படுத்தப்பட்டது.
- அமிர்தசரஸில் உள்ள பொற்க் கோவிலில் ஆயுதங்களை குவித்து வரும் சீக்கிய தீவிரவாதிகளை அகற்ற, அதன் மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்தியது.

**ஆபரேசன் பிளாக்தண்டர் (1986)**

- 1980களில் பஞ்சாபில் காலிஸ்தான் தீவிரவாதிகளுக்கு எதிராக ராஜீவ் காந்தி காலத்தில் நடத்தப்பட்டது
- சீக்கிய பயங்கரவாதிகளுக்கு எதிராக நடத்தப்பட்டது.
- பொற்கோவிலை தளமாகக் கொண்டு இயங்கிய தீவிரவாதிகள் கருப்பு பூனைப்படையால் ஒடுக்கப்பட்டனர்.

**ஆபரேசன் பஜ்ரங்**

- 1990 நவம்பர்
- உல்ஃபா பயங்கரவாதிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது.
- எனினும் பெரிய தலைவர்கள் கைது செய்யப்படவில்லை.
- இராணுவம் பற்றிய தவறான தகவல்களை இதன் பின்னர் உல்ஃபா அமைப்பு பரப்பியது.

**ஆபரேசன் ரினோ**

- அசாமில் அமைதி ஒழுங்கு பாதிக்கப்பட்ட போது 1991இல் செயல்படுத்தப்பட்டது.
- உல்ஃபா பயங்கரவாதிகள் அண்டை மாநிலங்களுக்கு தப்பி ஓடிவிடாமல் பிடிக்கப்பட்டனர்.
- 500 கொரில்லாக்கள் கைது, 12 மறைவிடங்கள் அழிப்பு

**ஆபரேசன் கோல்டன் டக்**

- வடகிழக்கு மாநில பயங்கரவாதத்தை ஒடுக்கிட 1995ஆம் ஆண்டு மிசோரம், சின் -மலைப்பகுதியில் உல்பா நாகா விடுதலை முன்னணி, மக்கள் விடுதலைப்படை உள்ளிட்ட பிரிவினைவாதிகள் 250 பேர் சிறைபிடிப்பு

**ஆபரேசன் கிரீன் ஹண்ட் (2009)**

- இந்திய அரசின் நக்சலைட் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஊடகங்கள் சூட்டிய பெயர்
- சட்டீஸ்கர், ஜார்க்கண்ட், ஆந்திரா, மகாராஷ்டிரா மாநிலங்களின் துணை இராணுவம் மாநில காவல் துறையால் மேற்கொள்ளப்பட்டது.
- 2009 செப்டம்பரில் 3ம் நாள் கூட்டு செயல்திட்டம் தண்டேவடா மாவட்டத்தில் கோல்ரா படையால் மேற்கொள்ளப்பட்டது.

**சிவப்பு கொரிடர்**

- நேபாள எல்லையிலிருந்து தமிழ்நாடு வரை பரவும் கிழக்கு கழிமுகப் பகுதியில் உள்நாட்டுப் பூசல் தீவிரமடைந்தது.
- இது பெரும்பாலும் அடர்ந்த காடுகள் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதி
- 92000 சதுர கி.மீ
- இது நக்சல்கள், இடதுசாரி தீவிரவாதிகளின் செல்வாக்கின் கீழ் இருந்தது.

**3) இந்தியாவில் அதிகரித்து வரும் மனித உரிமை பிரச்சினைகள் விரிவான ஒரு கட்டுரை வரைக.**

**1. காவல்நிலையச் சித்தரவதை** 15

- 2001 முதல் 2018 வரை இந்தியாவில் காவலர் வன்முறையால் 1727 இறப்புகள் நிகழ்ந்துள்ளன.
- 2000க்கும் மேற்பட்ட மனித உரிமை மீறல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

SURESH

**2. வேலை செய்யும் உரிமை மற்றும் தொழிலாளர் உரிமைகள்**

- ஒரு அடிப்படை உரிமை
- சம வேலைக்கு சம ஊதியம்
- நியாயமான ஊதியம்

**3. தேசத்துரோக சட்டம்**

- பிரிவு 124A IPC தேசத்துரோகமானது வார்த்தைகள் மூலமாகவோ, பேசுவதன் மூலமாகவோ எழுதப்பட்டதாகவோ (அ) அடையாளங்கள் மூலமாகவோ (அ) புலப்படும் பிரதிநிதித்துவத்தின் மூலமாகவோ (அ) வேறுவிதமான வெறுப்பு அல்லது அவமதிப்பை கொண்டுவர முயற்சித்தால் இந்தியாவில் சட்டத்தால் நிறுவப்பட்ட அரசாங்கத்தின் மீது அதிருப்தியை தூண்டுகிறது.

**4. சட்டத்திற்கு புறம்பான கொலைகள்**

- சட்டப்பூர்வ அதிகாரம் இல்லாமல் ஒருவரைக் கொல்வது
- IPC பிரிவு 96, ஒவ்வொரு மனிதனுக்கும் இயற்கையான மற்றும் உள்ளார்ந்த உரிமைக்கான தற்காப்பு உரிமை உள்ளது.

**5. தன்னிச்சையான கைது மற்றும் தடுப்பு**

- குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 50 எந்த ஒரு நபரையும் பிடிவாரண்ட் இல்லாமல் கைது செய்வது, கைது செய்யப்பட்ட நபருக்கு காரணத்தை தெரியப்படுத்துவது ஒவ்வொரு காவல்துறை அதிகாரியின் கடமை.

**6. ஆயுதப்படை மற்றும் காவல்துறையின் அதீத அதிகாரங்கள்**

- இந்திய ஆயுதம் மற்றும் மாநிலம் (ம) துணை இராணுவப்படைகளுக்கு தொந்தரவு நிறைந்த பகுதிகள் என வகைப்படுத்தப்பட்ட இடங்களுக்கு பயன்படுத்த சிறப்பு அதிகாரங்களை வழங்கியுள்ளது.

**7. பாலியல் வன்முறை**

- உலகெங்கிலும் உள்ள 1/3 பெண்கள் பாலியல் வன்முறை (அ) கூட்டுப் பாலியல் வன்முறையால் பாதிக்கப்படுவதாக உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது.

**8. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையம்**

- சமீபத்தில் இடம்பெயர்ந்தவர்களைச் சேர்ப்பதற்கு அனுமதி அளித்துள்ளது.

**9. குழந்தை தொழிலாளர்கள் முறை**

- குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் 1986
- சிறார் நீதி (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு குழந்தைகள் சட்டம் 2000)
- குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான உரிமைச்சட்டம் 2009.

**10. மனித கழிவுகளை மனிதர்களே அகற்றும் முறை**

- கையால் துப்புரவு செய்பவர்களை பணியமர்த்துதல் மற்றும் உலர் கழிப்பறைகள் (தடை) சட்டம் -1993 கைகளால் சுத்தம் செய்பவர்களின் மறுவாழ்விற்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் -2007

**11. பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான வன்முறை மற்றும் பாகுபாடுகள்**

- குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாத்தல் சட்டம் 2005

**4) தகவல் அறியும் உரிமைச்சட்டம் பற்றி விவாதிக்க.**

**தகவல் அறியும் உரிமைச் சட்டம்** **5**

1. மனித உரிமைக்கான உலகளாவிய தீர்மானம் 1948இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
   - 1966இல் குடிமை மற்றும் அரசியல் உரிமைக்கான சர்வதேச மாநாடு நடைபெற்றது.
2. முதன்முறையாக அரசாங்கத்தின் செயல்பாடுகள் பற்றிய குடிமக்களின் தகவல் அறியும் உரிமை உத்திரப்பிரதேச நீதிபதி கே.கே.மேத்யூ ராஜ் நரேன் வழக்கில் அங்கீகரிக்கப்பட்டது
3. திரு.குல்வால் எதிர் ஜெய்ப்பூர் முனிசிபல் கார்ப்பரேசன் வழக்கில் அரசியலமைப்பின் பிரிவு 19இன் கீழ் வழங்கப்பட்ட பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம் தகவல் அறியும் உரிமையை தெளிவாகக் குறிக்கிறது.
4. 1994இல் மஸ்தூர் கிஷான் சக்தி என்ற அமைப்பு முதன்முறையாக தகவல் அறியும் உரிமைக்கான பிரச்சாரத்தை தொடங்கியது.
5. 1996இல் மக்கள் தகவல் அறியும் உரிமைக்கான தேசிய பிரச்சாரம் உருவாக்கப்பட்டது.
6. இந்தியாவில் முதன்முதலில் தமிழ்நாடு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை 1997இல் நிறைவேற்றிய மாநிலமாகும். 2002இல் தகவல் அறியும் உரிமைச் சுதந்திரம் நிறைவேறியது.

SURESH

**தகவல் அறியும் உரிமை பெறுவதற்கான காரணங்கள்**

- அரசு சேவைகள் மற்றும் அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மை, பொறுப்புடைமையைத் தருகிறது.
- ஊழலைக் குறைக்கிறது. 1

**நோக்கம்** 1

- தெளிவான தகவல்களை மக்களுக்கு வழங்குதல்
- ஊழலை வெளிக்கொணர்தல்
- தகவலினை பெறுவதில் உள்ள நிலைத்தன்மை

**தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி தகவல்கள்**

- ஆவணங்கள் 3
- குறிப்புகள்
- அரசாணைகள்
- குறுஞ்செய்திகள்
- எண்ணங்கள்
- செய்திக் குறிப்புகள்
- ஆணைகள்
- ஒப்பந்தங்கள்
- மாதிரிகள் மற்றும் மின்னணு முறையில் வழங்கக்கூடிய தகவல்கள்

**தகவல் அறியும் உரிமையின் பொருள்** 3

- பணியிடத்தை ஆய்வு செய்யும் உரிமை ஆவணம் குறிப்புகளை பதிவு செய்தல்
- பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள்
- சான்றளிக்கப்பட்ட நகல்களைப் பெறுதல்
- சான்றளிக்கப்பட்ட மாதிரிகளை அச்சிட்டு ஃப்ளாப்பி வடிவில் தகவல்களை பெறுதல்

**தகவல் அறியும் உரிமைச்சட்டம்** 3

- 2005இல் நிறைவேற்றப்பட்ட தகவல் அறியும் உரிமைச்சட்டம் ஜம்மு & காஷ்மீர் தவிர அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் செயல்பட்டது.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் எந்தவொரு நிறுவனத்திடமிருந்தும் தகவலைப் பெறுவதற்கு இந்த சட்டம் அனுமதி வழங்குகிறது.

**பொது அதிகாரி**

- அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் அல்லது பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தின்கீழ் அல்லது மாநில சட்டமன்றங்களால் இயற்றப்பட்ட சட்டத்தின்கீழ் செயல்படுவர்.

